# <u>விழுப்புரம் நகராட்சி</u>

2021–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் **09–ஆம் தேதி வியாழக்கிழமை காலை 10.45 மணிக்கு விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தில்** நடைபெற்ற "**அவசர கூட்ட**" நடவடிக்கைகள்.

<u>முன்னிலை:–</u> **போ.வி.சுரேந்திர ஷா, எம்.ஏ.,**
**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,**

## <u>மன்றப்பொருள்</u>

**1.** விழுப்புரம் நகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்ட வழுதரெட்டி பஞ்சாயத்தில் அடிப்படை வசதிகளாக சாலை மேம்பாட்டு பணிகள் மழைநீர் வடிகால் கால்வாய் அமைத்து தர பொதுமக்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்து வலியுறுத்தி வருகிறார்கள். தற்போது வழுதரெட்டி VAO நகர் பகுதி மாவட்ட பெருந்திட்ட வளாகத்தை ஒட்டி அமைந்துள்ளது. சென்னை–திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் கடந்து வரும் முக்கிய அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் VAO நகரை கடந்து மாவட்ட பெருந்திட்ட வளாக பகுதிக்கு செல்ல வேண்டியுள்ளது. மேலும் மாவட்ட பெருந்திட்ட வளாகம் பின்புறத்தில் உள்ள ES கார்டன், அக்ரி நகர், கமலா கண்ணப்பன் நகர், குழந்தைவேல் நகர் பகுதி வாழ் பொதுமக்கள் VAO நகர் (மாவட்ட ஆட்சியர் அலுவலகம் பின்புறத்தில் உள்ள சாலை) சாலையை கடந்து செல்ல வேண்டியுள்ளது. தற்போது இச்சாலையின் மையப்பகுதியில் எல்லீஸ்சத்திரத்திலிருந்து குடிநீர் பிரதான குழாய் அலமேலுபுரம் வரை செல்கிறது. மேற்படி சாலையில் கனரக வாகனங்கள் பயன்படுத்தி வருவதால், போக்குவரத்து அதிகமாக இருப்பதாலும், இச்சாலையில் பிரதான குடிநீர் குழாய் அடிக்கடி பழுது ஏற்படுகிறது. இதனால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிறார்கள்.

எனவே, பொதுமக்களின் நலன் கருதி இச்சாலையில் உள்ள குடிநீர் பிரதான குழாயை 300 மீட்டர் நீளத்திற்கு சாலையின் ஓரமாக இடம் மாற்றி அமைத்திடவும், சாலையின் நீளத்தினை 5 மீட்டர் நீளத்திலிருந்து 10 மீட்டர் நீளத்திற்கு அகலப்படுத்திடவும், இதே சாலையில் மழைநீர் வடிகால் அமைத்து புதிய பேருந்து நிலைய பக்கவாட்டு கால்வாயுடன் இணைத்திட வேண்டியுள்ளது. இதற்கான மதிப்பீட்டு தொகை பின்வருமாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| Sl.No | Name of the Work | Amount (Rs.in Lakhs) |
|---|---|---|
| 1 | Laying of Pumping Main form Trichy Highway Junction to Collector Office Back Side Entry Gate in Villupuram Municipality. | 18.00 |
| 2 | Construction of Storm Water Drain and Culvert from VAO Nagar to New Bus Stand Side Drain in Villupuram Municipality. | 64.00 |
| 3 | Providing Bituminous Surface Road from VAO Nagar to Collectorate Master Complex Back Side Entry Gate in Villupuram Municipality. | 23.00 |
| | **Total** | **105.00** |

எனவே, மேற்கண்ட பணிகளுக்கு ரூ.105.00 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. பணியின் முக்கியத்துவத்தை கருதி திட்டத்தினை செயல்படுத்திட ஏதுவாக நகராட்சி நிர்வாக துறையால் செயல்படுத்தப்படும் திட்டத்தின் கீழ் மானியமாக நிதி ஒதுக்கீடு செய்து தந்திட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்கள் வழியாக மதிப்பீடுகள் மற்றும் திட்ட அறிக்கை அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்கள் வழியாக மதிப்பீடுகள் மற்றும் திட்ட அறிக்கை சமர்ப்பிக்கலாம். (5416/2021/இ1)

**2.** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.14006/2021/தி2-2, நாள்.08.09.2021 தேதிய கடிதத்தில் மாண்புமிகு.நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் 2021-22 ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்ட தொடரில் நகராட்சி நிர்வாக துறை மானிய கோரிக்கையின் போது விழுப்புரம் நகராட்சிக்கு 1 எண்ணிக்கையிலான LPG தகன மேடை அமைப்பதற்கு ரூ.150.00 இலட்சத்திற்கு மேற்கொள்ள அறிவிப்பு வெளியிடப்பட்டு அதற்கான மதிப்பீடுகள் மற்றும் திட்ட அறிக்கை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டதையடுத்து, விழுப்புரம் நகராட்சியில் மகாராஜபுரம் பகுதியில் 1 எண்ணிக்கையிலான LPG தகன மேடை ரூ.150.00 இலட்சத்தில் அமைப்பதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு மதிப்பீடுகள் மற்றும் திட்ட அறிக்கை அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு மதிப்பீடுகள் மற்றும் திட்ட அறிக்கை சமர்ப்பிக்கலாம். (6119/2021/இ1

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,**
**விழுப்புரம் நகராட்சி**